(அ) வடாற்காடு மாவட்டம் ஆம்பூர்-துத்திப்பட்டு இடையே பாலாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்.?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) அரசு ஆணை பிறப்பித்த பிறகு எடுத்துக் கொள்ளப் படும்.

திரு. ந. குலசேகரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு? அதை எப்போது எடுத்து அரசு நிறைவேற்ற இருக்கிறது, இந்த ஆண்டே அதை எடுத்து நிறைவேற்ற ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அந்தப் பாலம் கட்டும் திட்டம் நீண்ட நெடுநாளைய கோரிக் கையாக இருந்து வந்தது. 1981-82 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் 73 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஆண்டே வேலை துவங்கப்படும்.

திரு. ந. குலசேகரபாண்டியன்: தலைவர் அவர்களே, அந்தப் பாலம் தற்போது தரைப் பாலம் இருக்கும் இடத்திலேயே அமைக்கப்படுமா? அல்லது வேறு இடத்திலே அமைக்கப் படுமா? இந்த மதிப்பீட்டுத் தொகை அந்தப் பாலத்தைக் கட்டு வதற்கான மதிப்பீடா? அல்லது அதிலே இணைக்கும் சாலை களுக்கும் சேர்ந்து அந்த மதிப்பீடா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஆம்பூர் நகரத்திலிருந்து பேராளம்பட்டு செல்லும் நெடுஞ் சாலையிலே பாலாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டுவதற்காக தான் இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் 73 லட்சத்து 75 ஆயிரம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

வத்தலகுண்டு யூனியன் பகுதியில் சாலைபோடும் பணி

*வினா எண், 679— திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டைத் தொகுதி வத்தலகுண்டு யூனியனில் வத்தலகுண்டு உசிலம்பட்டி நெடுஞ்சாலைத்துறை ரோட்டில் சாந்திபுரம் பிரிவு-புள்ளிமான் கோம்பை (via) காமாட்சிபுரம் ரெங்கப்ப நாயக்கன்பட்டி ரோடு போட ஏற்கனவே நெடுஞ சாலைத் துறையால் எடுத்துக் கொள்ளப்பட்டதா?

(ஆ) ஆம் என்றால் அந்த வேலை இன்னும் முடியாமல் பாதியில் விட்டுவிடுவதற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை. (ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ரோடு எஸ்டிமெட் போட்டு சாங்ஷன் செய்யப்பட்டு வேலை ஆரம்பித்து வேலை ஓரளவு போடப்பட்டுள்ளது. ஆனால் அமைச்சர் அவர்கள் அது இல்லை என்று சொல்வதன் அர்த்தம் என்ன ஏற்கனவே எடுத்துக்கொள்ளப்பட்டது என்று மக்கள் சொல்கிறார்கள் இலாக்காவினர் சொன்னார்களே அதனுடைய உண்மையான நிலைமை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மதிப்பீடுதான் தயாரிக்கப்பட்டதே தவிர, வேலை ஆரம்பிக்கப்பட்டதற்கான எந்தவிதமான குறிப்பும் இங்கே தரப்படவில்லை. இதுவரை போஸ்ட்—வார் டெவலப்மெண்ட் ஸ்கீம் என்ற திட்டத்தின் அடிப்படையில் மண்சாலை போடப்பட்டது. ஆனால் இப்போது அந்த திட்டத்திற்கு 7 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் தேவைப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது இந்த அரசின் எந்தத் திட்டத்திலேயும் இதுவரையில் வரவில்லை ஆகவே நிதிநிலைமை சரியானவுடன் எடுத்துக்கொள்ளப்படும்.

[முற்பகல் 9.20]

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏழு லட்சத்திற்குத்தான் மதிப்பீடு போடப்பட்டது என்று கனம் அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அந்த ஏழு இலட்சம் ரூபாயைச் செலவு செய்து இந்த நடப்பாண்டிலேயே அந்தச் சாலை எடுத்துக் கொள்ளப்பட்டு, மலைப் பகுதியில் வாழ்கின்ற அந்த மக்களின் குறைகள் போக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரர்களே, நிதிநிலை சரியானால் இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்படும்.

கேளம்பாக்கம்—கோவளம் பாதையினிடையே உள்ள மேம்பாலம்.

*வினா எண். 680.—திரு கெ.. சொக்கலிங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் ஒன்றியம் கேளம்பாக்கத்திலிருந்து கோவளம் செல்லும் பாதையில் மத்தியில் உள்ள மேம்பாலம் இடிந்து விழுந்து சாலை மூடப்பட்டு உள்ளதா?